"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் 'கண்விழிப்பது வியர்த்தம்'" தாபிதம் :1876

# சத்தியவேத பாதுகாவலன்

"கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம் தொலைபேசி : 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

சத்தியவேத
பாதுகாவலன்

வருடசந்தா
இலங்கை: வெளிநாடுகள் :
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)
தனிப்பிரதி சதம் 15

89-ம் புத்தகம் | யாழ்ப்பாணம், 1964-ஆ மாசி மாதம் 15-ந்வ சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 7-ம் இலக்கம்

# வழிபாட்டு முறைத் திருத்தங்கள்

2-ம் வத்திக்கான் சங்கத்தினுல் அனுமதிக்கப்பட்ட வழிபாட்டு முறைத் திருத்தங்களுட்சில இம் மாதம் 16-ந்திகதியிலிருந்து நடைமுறையாக்கப் பரிசுத்தபாப்பரசர் கட்டளைபண்ணியிருக்கிறுர். கீழே குறிக்கப்பட்டிருப்பனவும் அவைகளுள் அடங்கியுள்ளன.

1. ஞாயிறு கடன்திருநாட்களிலே எல்லாப் பூசைகளிலும் பிரசங்கம் நடத்தப்படவேண்டும்.

2. பூசைநேரத்தில் உறுதிப்பூசுதல் தேவதிரவிய அனுமானம் கொடுக்கலாம்.

3. மெய்விவாகத் திருச்சடங்கு பூசையில் நடைபெறுவதானல் சுவிசேஷத்தின்பின்பு ஒருசிறு பிரசங்கத்துடன் ஆரம்பமாகும்.

பூசைநேரத்தில் நடைபெருவிடில், மெய்விவாகத் திருச்சடங்கு ஒரு சிறுபிரசங்கத்துடனும், விவாகப்பூசையின் நிருபமும், சுவிசேஷமும் வாசித்தலுடனும் ஆரம்பமாகும்.

சுயபாஷையில் திருப்பூசை சொல்வது, தேவதிரவிய அனுமானங்கள் கொடுப்பது போன்ற திருத்தங்கள் காலகதியில் நடைமுறையாகும். காலதாமதத்துக்குக் காரணம் தேவைப்படும் மொழிபெயர்ப்பு நுட்பமே. இம் மொழிபெயர்ப்புவேலையை விரைவில் செய்துமுடிக்க ஒருவிசேஷ குழுவினர்நியமிக்கப்பட்டிருக்கின்றனர். பிரதேச மேற்றிராணிமார்கள் தத்தம்மேற்றிராசனங்களின் விசேஷ சந்தர்ப்பங்களுக் கேற்றபடி தக்கதருணங்களில் இத்திருத்தங்களை மேற்கொள்வார்கள். கட்டளையிடப்பட்டிருக்கும் திருத்தங்களுள் வழிபாட்டுமுறைகளில் மேற்றிராணிமாரின் அதிகாரங்கள், குருமார், சந்நியாசிகளின் அனுதினசெபங்கள் முதலியவற்றுடன், இல்லறத்தோர் சம்பந்தமான சிலவும் உண்டு.

## மாற்றங்கள் ஏற்படுத்தப் போதியஅளவு மனத்துணிவு வேண்டும்

றியோ டி ஜனீரோநகர அதிமேற்றிராணியாரான மகாவந்தனைக்குரிய ஹெல்டர் கமெரு ஆண்டகையவர்கள் அண்மையில் பத்திரிகை நிருபர்களுடன் பேசுகையில் பின்வருமாறு கூறினுர் :

எமது சீவியத்தில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படுத்தப் போதியளவு மனத்துணிவுநமக்கு வேண்டும். இதுகாலவரையும் முதலாளித்துவ மனப்பான்மையுடன் நம்மவருள்அநேகர் நடந்துவந்தது உண்மையே. அப்போக்குக் கிறீஸ்துவின் பிரதிநிதிகளாகியநமக்கு எவ்வாறுபொருந்தும்? பணம் படைத்தவர்களுடனும், மத்தியதர மக்களுடனும் பழகிவந்ததுபோல் வறியமக்களுடனும் நாம் நடமாடி வந்திருக்கிறேமா? தொழிலாளர்களுடைய நன்மையில் கண்ணுங்கருத்துமாய் இருந்துவந்தோமா? இவற்றை நன்ருகச் சிந்தித்து எமது மனச்சாட்சி பிழையெனக் கூறுமானல் எமதுபோக்கை உடனடியாக மாற்றவேண்டும்.

இந்த மேற்றிராணியார் வறிய வாழ்க்கையை நடத்துபவர். ஒழிப்பு மறைப்பின்றிப் பேசும் வழக்கமுடையவர்.

## பொதுவுடைமையாளரின் புதியபோர்வை சமாதானப் பாதை

புரட்சியின்மூலமே பொதுவுடைமை ஆட்சியை உலகில் நிலவவைத்தல் பொதுவுடைமையாளர் சகலரது மேற்கோளாய் இருப்பினும், இன்று இவர்களுள் ஒருசாரார் தமது நோக்கத்தை அடைவதற்கு ஒருபுதியமுறையைக் கையாளுகின்றனர். அதுதான் சமாதானப் பாதை. இப்புதியமுறை ஏன்? புரட்சிமுறையை இவர்கள் கைவிட்டுவிட்டார்களா? இல்லையில்லை. தக்கதருணம் வரும்வரையும் காத்திருக்கின்றனர் இன்று அமெரிக்காவின் ஆயுதபலத்திற்கு இவர்கள் பயப்படுகிறுர்கள். மோதிக்கொண்டால் தமக்குப்பெரும் சேதம் வருமென்பதை இவர்கள் அறிவார்கள். ஆகவே, தக்கதருணம் வரும்வரையும் சமாதானப் போர்வையை அணிந்திருப்பது நன்றுஎன்பது இவர்கள் முடிவு இதுவே உண்மைஎன்பதற்குத் தகுந்த அத்தாட்சியுண்டு

புரட்சியைத் தேசங்களில் உண்டாக்குவதற்கு அன்றுபோல் இன்றும் பொதுவுடைமை நாடுகள் யாவும் கங்கணங்கட்டிக்கொண்டு நிற்கின்றன தென்கிழக்கு ஆசியாவிலோ, சைப்பிறஸ் தீவிலோ, மத்தியகிழக்கிலோ, மேற்கிந்திய தீவுகளிலோ, ஆபிரிக்க நாடுகளிலோ, தென் அமெரிக்க லத்தீன நாட்டுப் பிரதேசங்களிலோ கியூபா, சீன, ருஷியா, மற்றும்பொதுவுடைமை நாடுகள்யாவும் முழுமூச்சுடன் புரட்சியைத் தூண்டிவருகின்றன. இவ்விடங்களிலே இவை சமாதானப் பாதையை நாடாதது ஏனே?

## கத்தோலிக்க செமினறியில் கல்விகற்கிறுர் புறெட்டஸ்தாந்து குருமாணவன்

மைக்கல் ஜோண்றேயர் என்பவர் ஆங்கில கிறிஸ்தவ சபையில் வருகிறவருடம் குருப்பட்டம்பெற இருக்கும் மாணவன். அவர் சென்ற ஆறுமாத காலங்களாக உரோமாபுரியில் கத்தோலிக்க குருமாணவர் பயிலும் சர்வகலாசாலையில் லத்தீன்பாஷையில் சுவிசேஷம், போதகம் முதலிய கலைகளைக்கற்று வருகின்றுர். கத்தோலிக்க குருமாணவரின் சீவியத்தில் இவர்மிகவும் விருப்புக்கொண்டிருக்கிறுர். தான் இவ்வாறு உரோமாபுரியில் கல்விபயில விரும்பியதற்கு ஒற்றுமை இயக்கத்திலே தனக்குஉள்ள ஆர்வமே காரணமென்றார்

கத்தோலிக்கரைப்பற்றித் தான் புதிதாக அறியவந்திருக்கும் உண்மைகளை இவர் எடுத்துக்காட்டியிருக்கிறுர். அவை பின்வருமாறு:

● கத்தோலிக்கரும், புறெட்டஸ்தாந்துசபையோரும் கிறீஸ்துநாதரின் போதனைகளில் ஒத்துக்கொள்ளுபவன அநேகம்; மாறுபாடு கொண்டுள்ளன மிகச் சிலவே.

● கத்தோலிக்கருடன் புறெட்டஸ்தாந்தர் ஒன்ருகச்சேர்ந்து அனுபவிக்கக்கூடிய ஆன்மதிரவியங்கள் அநேகம் உள.

● கத்தோலிக்கர் விசுவசிக்கும் அநேக சத்தியங்கள், பாப்பரசரின் வழுவாவரம் உட்பட, நியாயத்துக்கு மாறுபட்டன அல்ல.

● கத்தோலிக்க திருச்சபை பிறர்சிநேகமும், உண்மையும் நிறைந்து விளங்குகின்றது.

● கத்தோலிக்க திருச்சபையின் முறைகளில் பிழைகள் இருக்கலாம்எனவும், புறெட்டஸ்தாந்தர் ஞானஸ்நானத்தினுல் வரப்பிரசாதம் பெற்றவர்கள்எனவும் கத்தோலிக்கர் ஒப்புக்கொள்ளுவது ஒற்றுமை இயக்கத்தின் சித்திக்கு நல்ல அடிப்படையாக இருக்கின்றது.

## முன்மாதிரிக்குரிய கத்தோலிக்கன் றெபெட் கெனடி

ஐக்கிய அமெரிக்க நாட்டு அற்றேணி ஜெனறலாகிய றெபெட் கெனடியவர்கள் கிழக்கு ஆசியாவிலே மலாசியா சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்சனைகளுக்குச் சமாதானம் காணும் நோக்கத்துடன் கிழக்கு ஆசியாவுக்கு விஜயம் செய்த பின் உவாஷிங்டன் போய்ச்சேருமுன் இங்கிலாந்துக்குச்சென்றிருந்தார். அவசரமாகத் தாயகம் திரும்ப வேண்டியிருந்தும், அன்று இங்கிலாந்து தேசப் பிரதமர், இராணி முதலியோரைத் தரிசிக்க இருந்தும் ஞாயிறன்று முதன் முதல் கோவில் சென்று, பூசைகண்டு திவ்வியசற்பிரசாதம் பெற்றபின்பே தமது இராஜிய கருமங்களில் ஈடுபட்டாரென இங்கிலாந்தில் இருந்து வந்த செய்திகள் கூறுகின்றன.

## கோவில் தண்டற்பணம் பரிமாறப்பட்டது

இங்கிலாந்தில் பேர்பிங்காம் நகரத்தில் ஒரேபகுதியில் இருகோவில்கள் உள. ஒன்று கத்தோலிக்க கோவில். மற்றது புறெட்டஸ்தாந்துகோவில். இருகோவில்களின் குருமாரும் ஆப்தநண்பர்கள். அண்மையில் அப்பகுதி வறியவர்களுக்கென இருகோவில்களிலும் ஒரேஞாயிறுதினத்திலே தருமப்பணம் விசுவாசிகளிடம் பெற்றுக்கொள்ளப்பட்டது. குருமார் இருவரும் தங்களுக்குக் கிடைத்த பணத்தை ஒருவர் மற்றவரிடம் கொடுத்துத் தத்தம்பிரிவின் வறியவர்களுக்கு உபயோகித்துக் கொண்டனர். ஒற்றுமை இயக்கத்தின்வேகம் வியப்புக்குரித்தாகின்றது அல்லவா.?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**மாசி மாதம் — 1964.**

| | | | |
|---|---|---|---|
| 16 | ஞா. | தபசுகால 1-ம் ஞாயிறு | [ஊ] |
| 17 | தி. | காலதினம் | [ஊ] |
| 18 | செ. | காலதினம் | [ஊ] |
| 19 | பு. | சதுர்காலப் புதன் | [ஊ] |
| 20 | வி. | காலதினம் | [ஊ] |
| 21 | வெ. | சதுர்கால வெள்ளி | [ஊ] |
| 22 | ச. | சதுர்காலச் சனி அர்ச். இரா. அந்தியோக்கிய. சிம்மா. | [வெ] |


# சத்தியவேத பாதுகாவலன்

**1964-ம் ஆண்டு மாசி மாதம் 15-ந் திகதி**


# தபசுகாலம்

தபசுகாலம் தொடங்கி விட்டது. இக்காலம் கர்த்தரின் உத்தானத்தை எதிர்நோக்கி நாம் எங்களை ஆயத்தப்படுத்தும் காலம். உத்தானத்தோடு நாமும் புத்துயிர் பெறும்பொருட்டு எங்களிலுள்ள பழையனவற்றைக் களைந்து புதியனவற்றைப் புகுத்தும் காலம். நம்மை நாமே சோதித்து நம் பாவநிலையை உணர்ந்து பச்சாத்தாபப்படுங்காலம். செபத்தின் காலம். விசேஷமாகத் தபத்தின் காலம்.

ஆண்டவருக்குத் தபமாகிய காணிக்கை செலுத்தாமல் அவருக்கு ஆராதனை செய்வது பக்திக்குறைவென்று அர்ச். கிறிசலோகு இராயப்பர் கூறியுள்ளார். "நமது சமூகத்தில் வெறுங்கையோடு வராதேயுங்கள்" என்பது தேவவாக்கு. நமது ஆராதனை மாத்திரம் போதாது, அத்துடன் தபம், ஒறுத்தல், பரித்தியாகக் கிரிகைகளும் இன்றியமையாதவை.

தபமின்றி உண்மையான கிறிஸ்த வாழ்க்கையில்லை. சிலுவையும் பாடுகளுமே கிறிஸ்துநாதரின் சீவியம். கிறிஸ்தவர்களாகிய எங்கள் சீவியத்தில் அவைகள் இருக்காவிட்டால் நாங்கள் பெயரளவில் மாத்திரம் கிறிஸ்தவர்கள்.

லூர்துகெபியிலே அமலோற்பவி எமக்குக் காட்டிய மோட்ச வழி தப வாழ்க்கை.

ஆதிக்கிறிஸ்தவர்கள் சாம்பல் தரித்து, சாக்கு ஆடைகள் அணிந்து, வனாந்திரங்களுக்கு ஏகி தமது பாவங்களுக்காகக் கடுந் தபம் புரிந்தார்கள். இப்படியாக நாம் எல்லோரும் செய்யவேண்டுமென்று திருச்சபை எதிர்பார்க்கவில்லை. ஆனால், வேறு எத்தனையோ விதங்களில் இக்காலத்திலே நாம் தபம் செய்யலாம். உதாரணமாக,

எமது சீவியத்தின் அந்தஸ்துக்குரிய கடமைகளைத் தேவனுக்குப் பணிந்த மனதுடனும் அக்களிப்புடனும் அனுசரித்தல்.

எமது நாளாந்த சீவியத்திலே வரும் பணமுடை போன்ற கஷ்டங்களையும், மற்றவர்களின் அநீதியையும், அவர்களால் ஏற்படும் கஸ்தி அவமானங்களையும் கிறிஸ்துநாதர் பட்டபாடுகளுக்காக நல்ல மனதோடு ஏற்றுக்கொள்ளுதல்.

உல்லாசப் பிரயாணம், அக்களிப்பு விழா, சினிமாக் காட்சி முதலியவற்றைத் தபசுகாலத்தில் முற்றாகத் தவிர்த்தல்.

மட்டசனம் உண்டு, தாம்பூலம், புகைத்தல் ஆதியவற்றை விலக்குதல்.

எமது பேச்சையிட்டுக் கூடியளவு சாக்கிரதை எடுத்தல்.

கூடுமாகில் நாளாந்தம் பூசை கண்டு, தேவநற்கருணை பெறுதல்.

இயன்றளவு தான தருமம் செய்தல்.

இரண்டாவது வத்திக்கான் பொதுச் சங்கத்தின் நோக்கம் கிறிஸ்துவின் ஞானச்சரீரமாகிய திருச்சபையைப் புதுப்பித்து அதற்குப் புத்துயிர் கொடுப்பது. அதுபோல அந்த ஞானச்சரீரத்துக்குச் சேர்ந்த நாங்கள், விசேஷமாக இந்தத் தபசுகாலத்தில், எங்கள் ஆத்மீக சீவியத்தை தபம், ஒறுத்தல் தற்பரித்தியாகக் கிருத்தியங்களால் புதுப்பித்து எங்கள் இரட்சகரின் உத்தானத்தோடு நாமும் புத்துயிர் பெற விடாப்பிடியாக முயற்சிப்போமாக.

**" நீங்களோ எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவின் சிலுவையிலே மகிமை பாராட்டவேண்டும். ஏனெனில், அவரிலேயே எங்களின் இரட்சணியமும், சீவியமும், உத்தானமும் உண்டு."**

# இரண்டாம் கிறிஸ்து

## அர்ச். பிரான்சிஸ் அசீசி

12-ம் நூற்றாண்டில் கிறிஸ்துவின் திருமறை அகிலமெங்கும் புகழ்மணக்கப் பரவியிருந்தபோதிலும்; பெருந்திரளான சமுதாயம் நிலையற்ற காரியங்களுக்கு அடிமைப்பட்டுப் பற்பல விதமான அக்கிரமங்களில் சிக்குண்டு கிறிஸ்துவின் அன்பு, தாழ்மை, தரித்திரம் முதலிய அரும் புண்ணியங்களின் அருட்சியை வரட்சியடையச் செய்ததினால் பலவிதமான போர்களும் ஊர்க்கலவரங்களும் மலிந்து கிடந்தன. இத்தாலியின் நிலையும் இத்தன்மையாய் இருந்தது. மதிகெட்டு மதி இழந்த சமுதாயத்தை மதிபெறச் செய்யும் கடீரவேலையைத் தேவன் அசிசிப்பதியாகிய புனித பிரான்சிசிடம் ஒப்படைத்தார். இவர் கடிவாளம் அற்ற பாவக்குவியலை கிறிஸ்தவ தாழ்மை, தரித்திரத்தினால் எதிர்த்து ஒன்றையொன்று அணைக்கும் கிறிஸ்தவ அன்பினால் உலகை ஒன்றுபடுத்த வருந்தினார்.

இவர் கல்வியிலும், கம்பீரத்திலும் அவ்வளவு மேம்பட்டவரல்ல; எனினும் கிறிஸ்து பெருமானின் மனத் தரித்திரத்தைமட்டுமல்ல வெளித்தரித்திரத்தையுமே, சகலரும் வியக்கத் தக்க முறையில் அனுசரித்த இப்பெருமானைத் திருச்சபையின் மக்கள் தலைமுறை தலைமுறையாக மதித்து வணங்கி வருகிறார்கள். இவர் இத்தாலியிலுள்ள அசீசிநகரில் இவ்வுலக ஒளியைக்கண்டார். வெகுதிரவியவாளனும், வியாபாரியும், உலோபியுமான பெர்னார்துஎன்பவர்இவரதுதந்தையார். இவர் ஞானஸ்நானத்தில் யோண்என்ற பெயரைப்பெற்றாலும், தாய்ப்பாஷையைவிடப் பிரான்சிய பாஷையைத் திறம்படப் பேசினதினால் செல்லப் பெயராக "பிரான்சீஸ்" என அழைக்கப்பட்டார்.

22 பிராயம்மட்டும் இவருடைய இளமைப்பருவம் கூத்துவிளையாட்டிலும், ஊர்சுற்றித்திரிவதிலும் கழிந்தன. ஆயினும் இவற்றால் தனது பரிசுத்தத்துக்குப் பங்கம் ஏற்படாமல் கண்மணிபோல் அதைக் காத்துவந்தார். இவரது இளமைப்பருவம் பிச்சைக்காரர்—குஷ்டரோகிகள்மேல் ஒருவித வெறுப்பையே ஏற்படுத்தியது. ஆயினும் காலக்கிரமத்தில் இவ்வெண்ணம் மாறி பிச்சைக்காரர், குஷ்டரோகிகள்மேல் ஒருவித அலாதிப்பிரியம் கொண்டார். ஒருநாள் யேசுபேரால் யாசகம்கேட்ட ஒரு பிச்சைக்காரனைத் துரத்திவிட்டார். திரும்பவும் தேவசிநேக சுடர்ப்பசிக்கு இரையாகித் துரத்தின பிச்சைக்காரனைத் தேடிப்போய்ப் பிச்சை வழங்கினார். திரும்பவும் இவர் குதிரைஏறிச் சவாரி செய்யும்கால் கிறிஸ்துநாதரே குஷ்டரோகி உருவில் தோன்றிப் பிச்சை கேட்டார். உடனே பிரான்சிஸ் அக்குஷ்டரோகியை முத்தம்செய்து மிக்க அன்புடன் பிச்சைவழங்கினார்; ஆனால் மறுகணம் அக்குஷ்டரோகி அதர்சனமானார். அன்றுதொட்டுக்குஷ்டரோகிகள்மேல் அவருக்கிருந்த அரோசிகம் நீங்கி, தமது சகோதரர்கள்போல் அவர்களை நேசிக்கத் தொடங்கினார்.

அன்றுதொட்டு உலகத்தின் இன்பசுகங்கள்மேல் பற்றற்றவராக அவைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக வெறுக்கத் துவக்கியதுடன் செபதபத்தின் மேல் பிரியமும் அலாதியாய் வளர ஆரம்பித்தது. அசீசி நகரின் பாழடைந்த கோயில்கள் இவரின் புது வாழ்வுக்கு உதவிசெய்தது. ஒருதினம் பாழடைந்த புனித தமியான் தேவாலயத்தில் செபத்தில் ஆழ்ந்திருக்கும் சமயத்தில், "தகர்ந்துபோய்க்கிடக்கும் என் ஆலயத்தைக் கட்டுவாயாக" என்ற அசரீரிவாக்கின் மர்மம் அறியாது மலைத்தார். பின்னர் தெளிவடைந்து வீடுசென்று தகப்பன் கடையில் இருக்கும் துணிமணிகளை விற்று அப்பணத்தைக்கொண்டு கோயிலைக் கட்ட முயன்றார். இவையெல்லாம் அவர்தந்தையின் ஆத்திரத்தை அதிகரிக்கச்செய்தது. குடியைக் கெடுக்க வந்தவன் என்றறிந்த தகப்பன் வேறு வழியின்றிமேற்றிராணியாரிடம்அவரை இழுத்துச்சென்று, "தன் சுவிகார உடைமையில் இனி இவனுக்குப் பாத்தியதைஇல்லை" என்றார். உடனே பிரான்சீஸ் தான் அணிந்திருந்த உடைகளைக்கழற்றி தந்தைமுன் எறிந்து இனிமேல் **"இவ்வுலகில் எனக்குத் தந்தை இல்லை; பரமண்டலத்தில் இருக்கிற பிதாவே என் உண்மைத் தந்தை"** என்றார்.

அன்றுமுதல் வீடு செல்லவில்லை. பிச்சைவேண்டிக் கோயிலைக் கட்ட முனைந்தார். குஷ்டரோகிகளை ஆதரித்து உதவினார். உலகமோ பிரான்சீசின் செய்கைகளைக் கேலி செய்து, பயித்தியகாரப் பட்டம் சூட்டியது. இதன்பயனாகக் கல்லெறிகளும் முதுகிலே வேண்டினார். இதே உலகம் சிறிதுகாலத்தில் தனது கொள்கையை மாற்றியது. கேலி பரிகாசத்துக்குப் பதிலாகப் பிரான்சீசை மதிக்க முன்வந்தது. அத்துடன் அவர்களிற் சிலர் பிரான்சீசைப் பின்பற்றவும் முனைந்தனர். இச்சமயம்தான், தான் முன்கேட்ட அசரீரியின் மர்மம் இவருக்குத் தெளிவானது. தன்சீடர்களுடன் புனித தமியான் கோவிலுக்குச்சென்று சுவிசேஷப் புத்தகத்தை மும்முறை புரட்டினார். மும்முறையும் யேசுபிரான் தரித்திரத்தைப்பற்றிக் குறித்தவைகளே அவர்முன் பட்டன. அன்றுதான் தன் வாழ்க்கையின் குறிக்கோள் அவரிடம் உறுதிப்பட்டது.

உலகம் தேடுவது செல்வம், புகழ், கீர்த்தி, அதிகாரம். எனக்கு ஆண்டவர் தகர்ந்துகிடக்கும் ஆலயத்தைக் கட்டிஎழுப்பும் அலுவலைத் தந்தார். ஆகவே அவ்வாலயத்தை எழுப்ப ஒரு பெரும் படையைத் தயாரிப்பேன். அப்படையின் சமர்க்கருவிகள் உலகம் தேடுவதற்கு நேர்மாறானவை; தரித்திரம், இகழ்ச்சி, தாழ்ச்சி. சம்பவித்ததேதெனில் பெருந்திரளான சீஷர்கள் பிரான்சீசைச் சுற்றிவளையத் தொடங்கினார்கள். இவர்களைக்கொண்டு பிரான்சீஸ்கு தம்முடைய சீவியகாலத்திலே மூன்று பெரும்படைகளை (சபைகளை) ஏற்படுத்தினார். இவரின் வாழ்க்கை முடியுமுன் அப்படை உலகமெங்கும் தழைத்தோங்கி அணிவகுத்துப் போராடியது. இன்னும் போராடி வருகிறது. உலகம் முடிவுபரியந்தம் போராடும்.

புனித பிரான்சீஸ்குவின் கடும்தவம், பத்திஉருக்கம், புண்ணிய அனுசரிப்பு இவையெல்லாம் ஒன்றுதிரண்டு அசீசி நகரின் அல்வேர்ணியா மலைஉச்சிமட்டும் இவரை வழிநடத்தியது. ஒருநாள் இம்மலை உச்சியிலே கிறிஸ்துவின் திருப்பாடுகளை மிகுந்த பக்திப் பரவசத்துடன் தியானிக்கும்போது கிறிஸ்துவின் ஐந்து திருக்காயங்களைத் தமது சரீரத்திலே பதியப்பெற்றார். 1227-ம் ஆண்டு இப்புனிதர் தரித்திர சீலனாய்ச் சிருஷ்டிப்பின் நோக்கத்தை நிறைவேற்றி, சிருஷ்டிகரிடம் சேர்ந்தார். மரித்த 18 மாதங்களில் அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பெற்றார். ஐப்பசிமாதம் 4-ந் திகதி திருச்சபை இவரின் திருநாளைக் கொண்டாடுகிறது. அன்னார் ஏற்படுத்திய சபை உலகின் பல பாகங்களிலும் பரவிக் கடவுளின் தகர்ந்துபோன கோயிலைத் திருத்தி அமைத்து வருகிறது. நமது இலங்கைத்தீவிற்கும் 15-ம் நூற்றாண்டில் புவனேகபாகு கோட்டை இராச்சி

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்புவின் வாழ்விலே ஒருநாள்



**எங்கள் பரிசுத்த தந்தை ஆறாவது சின்னப்பரின் ஒருநாளைய அலுவல்களை ஆராய்கிறது இக்கட்டுரை.**

காலை மணி ஆறு. வத்திக்கான் மாளிகையில் பாப்பரசரின் படுக்கை யறையில் ஒளி தெரிகிறது. ஆம் உலக மடங்கிலுமுள்ள ஐம்பது கோடி கத்தோலிக்க மக்களின் ஆன்மீக தந்தையின் வாழ்வில் ஒரு புதியநாள் உதயமாகிறது.

கண்விழித்ததும் படுக்கையின் பக்கத்திலுள்ள முட்டின்மீது முழந்தாளிடுகிறார். காலைச் செபமும் கடமைச் செபங்களும் கால்மணி நேரத்தைக் கவருகின்றன. காலைக்கடனிலும், ஸ்நானத்திலும் மற்றொரு அரை மணித்தியாலம் கழிகிறது.

தமது சிற்றாலயம் செல்கிறார் தந்தை. திவ்வியபூசைக்குத் தம்மை ஆயத்தமாக்கும் தியானத்தில் ஈடுபடுகின்றார். கால்மணிசெல்கிறது. சிற்றாலயக்கடிகாரம் ஏழுதடவை ஒலிக்கிறது.

திருவஸ்திரங்கள் தரித்து திருப்பலியை ஆரம்பிக்கிறார் திருச்சபைத் தலைவர். அவரது இருகாரியதரிசகர்களும் பூசைக்குதவி செய்கின்றனர். தமது பூசையை முடித்ததும் காரியதரிசிகளான குருக்களின் பூசைக்கு உதவிசெய்கிறார் பரிசுத்த பாப்பு.

காலை மணி எட்டு. காலைபாகாரவேளை அப்பமும், காப்பியுமே. காலை வேளைகளில் சின்னப்ப தந்தையின் உணவு. பிரதான இத்தாலிய காலைப் பத்திரிகைகள் சில அவரது மேசையில் வைக்கப்பட்டிருக்கும். உலகின் பல பகுதிகளிலும் நடைபெறும் முக்கிய சம்பவங்கள், செய்திகளைக்கொண்ட தொகுப்புகளும் அங்கிருக்கும். அவற்றைப் படித்துக்கொண்டே காலையாகாரத்தை அருந்துகிறார்.

ஒன்பது மணியடித்ததும் தமது காரியாலயத்துக்கு வருகிறார். அங்கே இராச்சியபார மந்திரியான கர்தினல் ஏராளமான காகிதக்கூடுகளுடன் (Files) காத்திருக்கிறார். திருச்சபையின் நிர்வாக சம்பந்தமாக ஆலோசனைகள் நடைபெறுகின்றன. மற்றைய அமைச்சர்களும் ஒருவர் ஒருவராக தங்கள் அலுவல்களுடன் வருகின்றனர். பலவித உத்தரவுகளும் இடப்படுகின்றன. பத்திரங்களைப் படித்து கைச்சாத்திடுகிறார். மணிபதினொன்று ஆகிறது.

தமது படிப்பறைக்குச் செல்கிறார் பரிசுத்ததந்தை. அங்கு அவரது பேட்டிக்காகக் காத்து நிற்கும் பிரமுகர்கள் அழைத்து வரப்படுகின்றனர். பின்னர் வத்திக்கான் மண்டபத்துக்குச் சென்று அங்கு பொதுப்பேட்டிகளும் அருளுகிறார். நேரமும் பகல் ஒரு மணியாகிவிடுகிறது.

அசனசாலைக்குச் செல்கிறார் தந்தை. இரு காரியதரிசிகளுடனும் பகற்போசனம் அருந்துகிறார். சில தருணங்களில் பேட்டிகள் நீடிப்பின் பகற்போசனமருந்துவது தாமதமாகும். காய்கறிச்சூப்பு, அப்பம், இறைச்சி அல்லது மீன், காய்கறி, பழங்களே அவரது பகலுணவின் முக்கிய அம்சங்கள்.

உணவின் பின் சுமார் ஒருமணித்தியாலம் பூரண ஓய்வெடுத்துக்கொள்கிறார். பின்னர் 4 மணிவரை தமது படுக்கையறையிலிருந்தவாறே உலகின் பலபாகங்களிலுமுள்ள கத்தோலிக்க திருச்சபைகள் சம்பந்தமான அறிக்கைகளைப் படித்து சத்திய திருச்சபையின் அன்றாட நிலைகளைத் தெரிந்து கொள்கிறார்.

நான்குமணி. ஒரு கோப்பை காப்பி அருந்தி புத்துணர்வு கொள்கிறார். பின்னர் தமது காரியாலயம் சென்று நிர்வாக அலுவல்களில் சுமார் இரு மணித்தியாலங்கள் செலவிடுகிறார்.

ஆறுமணியளவில் காரியாலயத்தை விட்டு வெளியேறி தமது அந்தரங்க காரியதரிசியுடன் வத்திக்கான் தோட்டத்தில் உலாவச் செல்கிறார். பின்னர் ஏழுமணியளவில் அசனசாலை சென்று இரா ஆகாரத்தை முடித்துக் கொள்கிறார். இரா ஆகாரம் வெகு இலேசானது. பாப்பரசர் எப்போதும் சொற்பமாகவே ஆகாரம் புசிப்பவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

உணவருந்தும் போதே வானொலியில் செய்திகள் படிக்கப்படுவதைக் கேட்பார். பின்னர் தொலைக்காட்சி மூலம் அல்லது சினிமாமூலம் அன்றாட செய்திச் சுருள்களைக் கவனிப்பார். தமது காரியதரிசிகள், உதவியாளர்கள், வேலைக்காரர்களுடன் இருந்து கலந்துரையாடுவார்.

பின்னர் அவர்களையும் அழைத்துக் கொண்டு சிற்றாலயம் சென்று செபமாலை யோதுவார். பின்னர் உதவியாளர்களிடமும், பணியாளர்களிடமும் விடைபெற்றுக் கொண்டு தமது காரியாலயம் செல்வார்.

அங்கு பதினொருமணிவரை செலவழிப்பார். தமது நிருபங்கள், பேச்சுகள், கடிதங்கள் முதலியவற்றைத் தயாரிப்பதில் இந்நேரத்தைச் செலவிடுவார். இத்தருணத்தில், வானொலிப் பெட்டியிலிருந்து மெல்லிசை ஒலித்துக் கொண்டிருக்கும்.

பதினொரு மணிக்கு தமது காரியதரிசியுடன் கடமைச் செபத்தின் மற்றப்பங்கைச் சொல்லி முடிப்பார். பின்னர் மீண்டும் காரியாலய வேலைகளில் மூழ்குவார். இரவு வேளைகளில் இராயப்பர் தேவாலய முன்றிலின் பக்கமாகச் செல்பவர்கள் நள்ளிரவு ஒன்றரை மணிவரை சிலதடவைகள் அதற்கு மேலும் வத்திக்கான் மாளிகையின் மூன்றாவது மாடியிலுள்ள பாப்பரசரின் அறையில் வெளிச்சம் எரிந்து கொண்டிருப்பதை அவதானிப்பர்.

இரவு மணிஇரண்டு. பரிசுத்ததந்தை தமது அலுவல்களை முடித்துக்கொண்டு படுக்கையறை செல்கிறார். முழந்தாளிட்டு இராச்செபம் செய்கிறார். தம்மையும், சத்திய திருச்சபையையும் இறைவனின்கையில் ஒப்படைத்து, நித்திரையில் ஈடுபடுகிறார். இவ்விதமே திருச்சபைத்தலைவரின் தினசரிநிகழ்ச்சிகள் சிரமமும், களைப்பும் நிரம்பியதாயும், ஓய்வும், இளைப்பாற்றியும் குறைந்ததாயும் கழிகின்றன.

சா. பெ.

# பேசும் பேனா

### ஒரு நல்ல முயற்சி

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் பட்டதாரி மாணவர்களிடையேயுள்ள கத்தோலிக்கர்கட்காக இயங்கி வரும் நியூமன் கழகம் பற்றி பேசும் பேனா சிலதடவைகள் குறிப்பிட்டுள்ளது. இக்கழகத்தினர் போர்தனையிலிருந்து வெளியிட்டுள்ள "வருடாந்த சஞ்சிகை" அவர்களின் கத்தோலிக்க சேவை ஆர்வத்தையும், அன்னாரின் இலக்கியத்திறனையும் எடுத்துக்காட்டுவதற்காக அமைந்துள்ளது. மலரை மும்மொழிகளிலும் கட்டுரைகள் அணி செய்கின்றன. தமிழ்ப்பகுதியில் காவலன் நேயர்கட்கு "உல்லாச வேளை" மூலம் அறிமுகமான அமலனதும், சிறுகதைகள் மூலம் அறிமுகமான மோகன் ராஜினதும் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### பாடுகளின் காட்சி

தபசுகாலத்தில் திவ்விய இரட்சகரின் திருப்பாடுகளை நாடகமாக நடித்துக்காட்டும் முறை தற்போது பல இடங்களில் வெற்றிகரமாகக் கையாளப் படுகின்றது. கடந்தவருடம் வத்தளையில் நடைபெற்ற பாடுகளின் காட்சியைப் பார்வையாளர்களும், பத்திரிகைகளும் வெகுவாகப் பாராட்டினர். இவ்வருடமும் மேற்படி விசாலணைப் பங்கில் பாடுகளின் காட்சியைத் திறம்பட நடித்துக் காட்டுவதற்காக முயற்சிகள் எடுக்கப்படுகின்றன எனப் பேசும் பேனாவுக்குச் செய்திகள் எட்டியுள்ளன. கடந்த வருடத்தில் இளங்கன்னியர்களே கதாபாத்திரமேற்று நடித்தார்கள். இவ்வருடமோ காளையர்கள் திவ்விய இரட்சகரின் இரட்சணியப் பலியைத் தத்ரூபமாக அரங்கேற்றுவதில் முனைந்துள்ளனர். தற்போது கொழும்பிலும் அதைச் சூழவுள்ள இடங்களிலும் பாடுகளின் காட்சி பற்றிய கவர்ச்சிகரமான சினிமா சிலைட்டுகள் மூலம் பிரசாரம் நடைபெறத்தொடங்கியுள்ளது.

### மீண்டும் வருகிறான்

கலாசாலைகளின் வருடாந்த சஞ்சிகைகளைச் சேர்ப்பதில் பேசும் பேனாவுக்கு ஒரு தனி ஆர்வம் உண்டு. இப்படிச் சேர்க்கப்பட்ட கலாசாலைச் சஞ்சிகைகளின் தொகுப்பில் யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரியின் சஞ்சிகையே எப்போதும் முதலிடம் வகிக்கும். பிற கல்லூரிகள் கலாசாலைச் சஞ்சிகையென்றால் என்ன என்று தெரிந்து கொள்வதற்குப் பலவருடங் கட்கு முன்னதாகவே மாதமொரு முறையும் ஆண்டு தோறும் சஞ்சிகைகளை வெளியிட்டு வந்த பெருமை யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரிக்கே உரியது. Botteled Sunshine என்ற அக்கல்லூரியின் மூந்திய வெளியீடுகள் அக்காலத்தில் தனிச் சிறப்புப் பெற்ற சஞ்சிகைகளாகும். பின்னர் "பத்திரிசியன்" என்ற நாமத்துடன் இச்சஞ்சிகை ஆண்டு மலராக வெளிவந்தது. வருடாவருடம் பத்திரிசியர்களையும், பத்திரிசியர் அல்லாதோர் பலரையும் மகிழ்வித்து வந்த பத்திரிசியனை கடந்த மூன்றாண்டுகள் காணாது கலக்கமடைந்தோருள் யானும் ஒருவன். எம்கலக்கமெல்லாம் பத்திரிசியனை மீண்டும் கண்டதும் மறைந்துவிட்டது.

### நினைவு மலர்

தனக்கேயுரித்தான ஏறுநடையுடன் கம்பீரமாக காட்சிதருகின்றான் பத்திரிசியன். சம்பத்திரிசியார் கல்லூரியினது சிறப்பான முன்னேற்றத்துக்காக அயராதுழைத்த சிற்பி காலஞ்சென்ற லோங் அடிகளார்க்கு இம்மலர் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. எனவே அடிகளாரின் சேவையைப் பத்திரிசியர்கட்கு எடுத்தோதும் நினைவு மலர் என்றும் இப்பத்திரிசியனை அழைக்கலாம். பத்திரிசியனின் வாழ்வில் லோங் அடிகளாரின் செயல்கள் தனிச் சிறப்புப் பெற்றவை. கடந்த மூன்று வருடங்கட்குமுரிய கலாசாலை நிகழ்ச்களுடன் அரிய பல கட்டுரைகளையும் தாங்கி நிற்கும் பத்திரிசியனுக்கும், அதன் வெளியீட்டாளருக்கும் பேசும் பேனாவின் நல்லாசிகள் உரித்தாகுக.

### நகைச்சுவை

விற்பனையாளர்: இதோ ஒரு அருமையான புத்தகம். நீங்கள் அவசியம் படிக்கவேண்டியது. விலையும் மலிவுதான்.

வீட்டுக்காரர்: எனக்கு வாசிக்க நேரமில்லை ஐயா.

விற்பனையாளர்: நல்லது உங்கள் குழந்தைகட்காவது உதவும் அல்லவா.

வீட்டுக்காரர்: எனக்குக் குழந்தைகள் கிடையாது. இந்தவீட்டில் வேறு எவருமில்லை. ஒரு பூனையைத்தவிர.

விற்பனையாளர்: நல்லது. உங்களுக்கு அந்தப்பூனையின்மீது கோபம் வரும்போது அதன்மீது எறிவதற்கு இந்தப்புத்தகம் உதவுமல்லவா?

### புகையாளரின் கவனத்துக்கு

அமெரிக்காவில் சென்ற வருடத்தில் சிகரட் விற்பனை வெகுவாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. இதனால் சிகரெட்

(தொடர்ச்சி 6-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் மன்றம்

சகோதரிகளே, வணக்கம்!

இறைவன் தமது போதகசீவியத்தை ஆரம்பிப்பதற்குமுன்னர் நாற்பது நாட்கள் இரவும், பகலும் வனந்திரத்தில் செபம், தபம்செய்து ஆயத்தமானர். அதைக்குறித்து நமது பாவங்கட்காக நாம் மனஸ்தாபப்பட்டுத் தபஞ்செய்வதற்கெனக் குறிக்கப்பட்டகாலம் இதோ ஆரம்பித்து விட்டது. ஏழுவாரங்களைக் கொண்ட இக்காலத்திலே நாம் நமது திவ்விய யேசுவினதும், தேவதாயாரினதும் திருப்பாடுகளையும், வியாகுலங்களையும் தியானிப்போம். உளம்நெகிழ்ந்து மனஸ்தாபப்படுவோம். ஆடம்பர உடைகளைத் தவிர்ப்போம். அனுவசிய சம்பாஷணைகளை விலக்குவோம். நாவிற்கு ருசியான பதார்த்தங்களைத் தவிர்ப்போம். படக்காட்சிகள், உல்லாச விளையாட்டுக்களை நாடாதிருப்போம். தபசுகாலம் நமக்கு உண்மையான தபத்தின்காலமாக இருக்கட்டும். அப்போதுதான் தபசுகாலமுடிவில் நாம் நம் இதயநிறைவுடன் "அல்லேலூயா" இசைக்கலாம்.

ரோஜா.



# கண்ணீர் சிந்துவதேனம்மா!

## (தேவதாயின் 1-ம் வியாகுலம்)

(1) மனுக்குலத்தை மீட்பதற்காய்
மாபரன் யேசு பாலகனாய்
மாடடை குடிலில் பாதிரவில்
மாமரியுந்தன் கரங்களிலே
மகிமையோடே தவழ்ந்த இன்பம்
மாறுதற்கிடையில் மனம்வருத்த
மாபரனுக் கொப்புவித்து மீட்கையிலே
மாதுயர வார்த்தையைச் செவிபேற்றே
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(2) மங்கையுன் இதயம் வருந்துமென்றே
மாகுரு சிமியோன் மொழிந்ததனால்
மனந் துடிதுடித்தே மறுகிநொந்த
மாமரியே! வியாகுலத் தாயே!
மானிடர் எமக்காய் முதல் முதலில்
மாசறு உந்தன் இதயத்திலே
ஓர் பெரும் கூரிய வியாகுலவாள்
ஊடுருவ மனமுவந்தே நீரும்.
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(3) பச்சைப் பாலக யேசுவையே
பாவிகள் பலிக்காய் அர்ப்பணித்தே
பாரினில் உடன் இரட்சகியாகப்
பணியாற்ற விழைந்த பரமதாயே!
வேத முறைமைகள் பிசகாது
வேண்டுங் கடமைகள் அனுசரிப்போம்!
பாதகர் பாவ நெறிநீங்கி
பரமன் வழிசெல்ல முயன்றிடுவோம்!
கண்ணீர் சிந்துவதேனம்மா!

(தொடர் சித்திரம்)

# கேட்டேன்! கேட்டது கிடைக்கவில்லை!

## ஏனோஇந்த முறையீடு?

அநேக வருடகாலமாக ஒரு பரிசுத்த கன்னிகை கற்புக்குவிரோதமான பாவச்சோதனையினால் பீடிக்கப்பட்டாள். மனவேதனையுடன் அல்லும்பகலும் அவள் இறைவனைநோக்கி: "இப்பாவச்சோதனையைக் கட்டாயமாக அவர் நீக்கியருள வேண்டும்"என்று இறைஞ்சிவந்தாள். வருடங்கள் பறந்துசெல்ல, அவள் தனது நித்தியவாக்குத் தத்தத்திற் தளதிராகக் கன்னிகாமடத்தையே விட்டு நீங்கிவிடவேண்டுமென்று நினைக்குமளவுக்குப் பாவச்சோதனை அவளை வாட்டியது. ஓர் இரவிலே அவள்சொல்லொணு வியாகுலத்துடன் "அன்புள்ள தேவனே! இதோ எத்தனையோ வருடங்களாக உமைநோக்கிப் பிரலாபித்தேன. ஆனல், நீரோ என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. இனிமேல் எனது உதடுகள் செபிக்கப்போவதில்லை, என் சரீரத்துக்கான நன்மையைக்கூட நான் யாசிக்கவில்லையே! உமக்கு ஏற்றவளாக நடப்பதற்காகத்தானே இவ்வரத்தைக் கேட்டேன் என்று அங்கலாய்த்தாள். அதேஇரவிலே நித்திரையில் அவள் ஓர் அருமையான காட்சியைக் கண்டாள். அன்னைமரி அவள் முன்தோன்றி, "மகளே! என்னசெய்ய நினைத்தாய். உனதுசெபங்களை விட்டுவிடவா எண்ணினுய். நாக அலகைக்குக் காதுகொடுக்கவா துணிந்தாய்? உனது மணவாளன்யேசு உனதுசெபப் போக்குக்கும், நிலைநிற்றலுக்குமாக இரட்டைமுடியைத் தயார்செய்து கடைசிரோஜாவைச் செருகும்நேரத்திலா நீ பின்வாங்குகிறுய்" என்று கண்டித்தாள். விழித்துக்கொண்ட கன்னிகை யோசித்தாள். தேவதாய்க்கு நன்றிகூறினுள். தொடர்ந்து செபத்தில் நிலைத்திருந்தாள்என்று சொல்லவும் வேண்டுமா?

## கேட்பதெல்லாம் கிடைத்துவிட்டால்:

இறைவனுக்கு வருங்காலத்தில் என்ன நடக்கும்என்பது துலாம்பரமாய்த் தெரியும். ஆனுல், நாமோ ஒருவேண்டுகோளை இறைவனிடம் கேட்கும்போது அது நமக்குக் கட்டாயம் நன்மைசெய்யும்என்றே நினைக்கிறோம். ஆனல்,எதிர்காலம் எத்தகையதோ யார் அறிவார். நமக்குத் தீமையானதை நாம் எப்படி வருந்திக்கேட்டாலும் கடவுள் கொடுக்கமாட்டார். ஆகவே, நாம் பிடிவாதமுள்ள சிறுகுழந்தைகளைப்போலல்லாது அமைச்சலுள்ள பிள்ளைகளாக வேண்டுவோம். ஒருமுறை விளையாட்டுத் தோழர்களான இருசிறுவர்கள் "தொண்டைக்கரப்பான்" நோயினுல் பீடிக்கப்பட்டனர். அயர்லாந்து தேசத்தைச்சேர்ந்த இவர்கள் பத்தியுள்ள கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஜெருல்ட்டின் அன்னை தந்தையர் தமதுபிள்ளையைக் கொடிய நோயிலிருந்து மீட்டுத்தரவேண்டுமென்று இறைவனிடம் அழுகையுடன் மன்றுடினர். ஆனுல், அவர்கள் மன்ருட்டோ, "உமக்குச் சித்தமானுல் எமது ஜெருல்ட்டை எம்மிடம்தாரும" என்றவாறிருந்தது. அதேசமயத்தில் றுேபேட்டின் பெற்றோரும் பல நவநாட் செபங்களைச் செய்தவண்ணமிருந்தனர். அவர்களது மன்ருட்டோ கட்டாயமாக எமது புத்திரனுக்குச் சுகத்தைத் தந்தேயாக வேண்டுமென்றிருந்தது. நாட்கள் கழிந்தன. ஜெருல்ட் பரலோகம் பறந்து சென்றுன். றுேபேட் சுகதேகியாய் வீடுதிரும்பினுன். கண்ணீருடன் கடவுள் சித்தத்தை ஏற்றனர் ஜெருல்ட்டின் பெற்றோர். இறைவனுக்கு நன்றிசெலுத்தக்கூட மறந்து இன்பக்களிப்பெய்தினர் றுேபேட்டின் அன்னைதந்தையர்.

காலமோடியது. அயர்லாந்தின் சுதந்திரப்போர் தொடங்கியது. வாலிப மிடுக்குநிரம்பிய றுேபேட்டை அரசாங்கம் அழைத்தது. இராணுவமுகாமின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றினுன். பணப்பேய் அவனை ஆட்டியது. லஞ்சம் பெற்றுன். நாட்டை எதிரிகள் கையில் ஒப்புவிக்கும் துரோகியானுன். சதித்திட்டம் அம்பலமாகியது. றுேபேட் அரசாங்கத்தால் மரணத்தீர்வை பெற்று,தூக்கிலிடப்பட்டான்.றுேபேட்டின் அன்னைதந்தையர் வெளியில் தலைகாட்டமுடியாது அவமானத்தால் குன்றிப்போயினர். சிறுபிராய வருத்தத்தில் அவன் இறந்திருந்தால் இக்கதி நேர்ந்திராதேஎன அங்கலாய்த்தனர்.

## நினைப்பதெல்லாம் கிடைக்குமா?

நமது செபங்கள் அநேகதடவைகளில் நம்பிக்கையற்றனவாக இருக்கின்றன. நமதுவாயோ செபிக்கின்றது. ஆனல், உள்ளமோ இதனக்கேகிடைக்கப் போகின்றதுஎன்று ஐயம்கொள்கின்றது. நாம்வேட்பதைக் கட்டாயம் தப்பாது கடவுள் தருவார்என்ற நம்பிக்கை நமக்கிருந்தால் தான் நாமகேட்பதை அடையலாம் ஒருமுறை ஒருபெண் தனது முற்றத்தில் அழகான பூந்தோட்டம அமைப்பதில் கரிசனைகொண்டாள். ஆனுல் அயல்வீட்டுக்காரனது வளவில் இருந்த மாமொன்று அவனது தோட்டத்தின்மேலே சரிந்திருந்தது. அவளது பூமரங்கள் இம்மரத்தின் நிழலினுல் சரிவர வளரவில்லை. மேலும், மரத்திலிருந்து சருகுகளும், சுள்ளிகளும் அவள்தோட்டத்தை அழுக்காக்கின. இந்நங்கை ஒருநாள் வேதநூல் ஒன்றில் "நம்பிக்கையுடன் இம்மலையை அப்பாலே போ"என்று சொல்லுங்கள் அது பெயர்ந்து கொடுக்கும் என்ற வார்த்தைகளைப் படித்தாள். எனவே அவள்தனது யன்னலிலிருந்து வானத்தை நோக்கிப்பார்த்து, "இறைவனே! நம்பிக்கையுடன் வேணடுகிறேன். நாளை இம்மரம் மற்றப்பக்கம் சரிந்திருக்கட்டும்என்று வேண்டினுள். அடுத்தநாள் காலையில் எழுந்தவுடன் ஓடிப்போய் யன்னலினூடாக மரத்தைப் பார்த்தாள். மரம் இருந்தது போலவே இருந்தது. உடனே அவள் "அதுதானே நினைத்தேன், செபித்து விட்டால் மரம் அசைந்துகொடுக்குமா? மரமாவது அசைவதாவது" என்று தனக்குள்ளேகூறினுள். அவளது செபத்தில் முழுநம்பிக்கை இருக்கவிலலையே. இப்படித்தான் நாமும் தளம்பியமனங்களுடன் செபிக்கிறோம். எப்படி நம் மன்ருட்டுக் கேட்கப்படமுடியும்.

## கேட்டாலே அள்ளிக்கொடுப்பார்:

செபங்கள் வியர்த்தமாய்ப் போவதில்லை. விடாமுயற்சியுடன் நாம் கேட்பது எல்லாம் கேட்டதற்கும் அதிகமாக நமக்குக் கிடைக்கும். செபத்தினுல் மனிதர் ஏராளமான நன்மைகளை அடைந்திருக்கின்றனர் என்பது நாம் சொல்லாமலே விளங்கும். ஒருபொதுவுடைமைவாதியான டாக்டருடன் கன்னியாஸ்திரிஒருத்தி அரசினர் ஆஸ்பத்திரியொன்றில் கடமையாற்றுவாள். உடலில் சத்திரசிகிச்சைசெய்வது அவர்கள் நாளாந்த அலுவல். ஒவ்வொருமுறையும் உடலைஅறுத்துச் சத்திரசிகிச்சைசெய்து முடிவுறும்நேரத்தில் இந்தவைத்தியர் கன்னிகையைப்பார்த்து, "எத்தனையோபோது உடலை அறுத்துப் பார்த்துவிட்டோம். ஆனல், ஆத்துமம்என்ற ஒன்றைக் காணவில்லையே"என்றுகூறி அவளை ஏளனம்செய்வார். அதற்கு அக்கன்னிகை சாந்தமாக "நீர் இறப்பதற்குமுன் உமது ஆத்துமம் எங்கே, எந்நிலையில் இருக்கிறதுஎனக் கண்டுபிடிப்பீர்"என்று கூறுவாள். இக்கன்னிகையும் அவளுடைய மடத்து மற்றக் கன்னியாஸ்திரிகளும் இந்தவைத்தியரின் மனந்திரும்புதலுக்காக எத்தனையோ வருடகாலமாக மன்றுடி வந்தனர்.

ஒருமுறை விடுமுறையில் அந்தவைத்தியர் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். அங்கே அவர் சடுதியாக நோயுற்று இறந்துபோனுரெனத் தகவல் கிடைத்தது. அவரது அந்தியநேரத்தைப்பற்றி அறிவதில் கன்னிகைகள் அக்கறை காட்டினர். கூடியவிரைவில் செய்தியும் கிடைத்தது. இந்தவைத்தியர் கன்னியாஸ்திரிகளால் நடத்தப்படும் ஒருவைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அங்கே தானகவே ஒருகுருவரை அழைத்து ஞானமுழுக்குப்பெற்றுச் சந்தோஷமாக மரித்ததாகவும் தன்கைப்பட வரைந்த கடிதமொன்றை இறப்பதற்குமுன் அனுப்பி அவர்கள் மன்ருட்டுக்களுக்கு நன்றியும் கூறியிருந்தார். கன்னிகைகள் கொண்ட ஆனந்தத்திற்கோ அளவில்லை.

## கேளுங்கள் கொடுக்கப்படும்:

கேட்டது கிடைக்கவில்லை என்று அங்கலாய்ப்பவர்களே! இறைவன் ஒரு நல்லதந்தை. நமது பிள்ளைகளுக்கு எது அவசியமோ அதைக் கேளாமலே தருவார். ஆனுல், நாம் கேட்கவேண்டு

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்கருணை மகாநாடு

கடவுள் வழிபாடு, இடவசதி, போக்குவரவுச்சாதனம், விளம்பரம், இசை, சித்திரக்கலை, இந்தியக்கூட்டு நடனம் ஆகிய மகாநாட்டின் பலதிட்டங்களைச் செய்து முடிக்க 500 நபர் கொண்ட 40 சிறு குழுக்கள் செயலாற்றிவருகின்றன.

தூக்கிச்செல்லக்கூடிய 300 பலிப்பீடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. 700 பேர் அடங்கிய ஒரு மாபெரும் பாடகர்குழு பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஒழுங்கு முறையைக் கவனிக்க 500பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏறக்குறைய 1000 வழிகாட்டிகளும், மொழிபெயர்ப்பவர்களும் மகாநாடு துவக்கும் நாளில் இருப்பர்.

இந்தியா, பாகிஸ்தானின் பலபாகங்களிலிருந்து கூடும் ஏராளமான மக்கள் நீங்கலாக, 20,000க்கு அதிகமான அயல்நாட்டு மக்களும் திரண்டுவருவர் எனத் தெரிகிறது.

இந்தியாவிலுள்ள 73 மேற்றிராசனங்களிலிருந்தும், மேற்றிராசனத்துக்கு ஒருவராக 73 குருமட மாணவருக்குக் குருப்பட்டம் அளிக்கவும், கூடுமாயின் உலகின் 5 கண்டங்களிலிருந்து 5 புதிய மேற்றிராணிமார்களுக்கு அபிஷேகம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய அரசும், உள்ளூராட்சி ஆயங்களும் நற்கருணை மகாநாடு நடைபெறும் செய்தி அறிவிக்கப்பட்டதிலிருந்தே பெரும் ஆர்வம் தெரிவித்து, பலவகையில் ஆதரவு அளித்து வருகின்றன. பரந்த நிலப்பரப்புள்ள இரு இடங்கள் மகாநாட்டின் உபயோகத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ளன.

300 நடனமாடுவோரும், 1000 இசைவாணர்களும் வழிபாட்டு கூட்டு நடனம் நிகழ்த்த மாபெரும் மேடை நிறுவப்படும். 50,000பேர் இக்காட்சியைக் கண்டுகளிக்க வேண்டிய இடவசதியும் செய்யப்படும்.

மகாநாடு சமயத்தில் கடல்போல் திரண்டுவரும் மக்களுக்கு இடவசதி அளிக்க மிதக்கும் விடுதிகளும் நிறுவப்படுமெனத் தெரிகிறது.

சர்வவியாபி.

# கற்றன் கிறிஸ்தவ ஒற்றுமைக் கூட்டம்

**"ஆண்டவருடைய வாக்கியம் நிறைவேறும் பொருட்டே நாம் ஐக்கியத்தைத் தேடவேண்டும்."**

சென்றவாரம் கற்றன் பங்கில் நடைபெற்ற ஒற்றுமை வாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கிய கண்டி மெதடிஸ்த பாதிரியார் வண. டென்சில் டீ சில்வா அவாகள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், "உலககாரியங்களைக்குறித்து நாம் ஒற்றுமையைத் தேடுவதற்கு முயற்சிப்போமேயானால் அந்த முயற்சியை ஆண்டவன் தடை செய்வாராக! ஆனால் நமது ஆண்டவராகிய யேசுக்கிறீஸ்து கடைசி இராப்போசனத்தின்போது, "பிதாவே தேவரீர் நீர் என்னை அனுப்பினீர் என்று உலகம் விசுவசிக்கவும், நீர் என்னிலும் நான் உம்மிலும் இருக்கிறதுபோல அவர்களும் நம்மிடத்தில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கின்றேன்" (அர்ச். அரு. 17 அதி. 21-ம் வச.) என்று வசனித்த இந்தவாக்கியம் நிறைவேறும்படியாகத்தானே கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்தவ ஒற்றுமையைத் தேடவேண்டும்" என்று கூறினர்.

அக்கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய கற்றன் அங்கிளிக்கன் பாதிரியாரான வண. சாம் ஹோசிங்ரன் அவர்கள் "பாவமே கிறிஸ்தவ பிரிவினைக்கு அடிப்படைக் காரணம்" என்று வலியுறுத்தினர்.

ரோ. க. திருச்சபையின் சார்பில் கலந்து உரையாற்றிய திரு. வின்சன் பெர்னாண்டோ அவர்கள் "உண்மையான உள்ளன்புதான் ஒற்றுமைக்கு அத்திவாரமாகும்" என்று குறிப்பிட்டார்.

கிறிஸ்தவ ஒற்றுமைவாரக் கூட்டம் கற்றன் கைலண்ட்ஸ் கல்லூரிமண்டபத்தில் வண. பஸ்டியான், O. S. B. (கற்றன் பங்குக் கத்தோலிக்க கட்டளைக்குரவர்) அவர்கள் தலைமையில் இனிதே நடந்தேறியது. இக்கூட்டத்தில் கத்தோலிக்க, மெதடிஸ்த, அங்கிளிக்கன் திருச்சபைகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் கலந்துகொண்டனர்.

—நிருபர்

## கண்டியில் கிறிஸ்தவ ஒற்றுமை இயக்கம்

கண்டிக்கு அண்மையிலுள்ள பிலிமத்தலாவ என்னும் இடத்தில் அமைந்துள்ள புரொட்டஸ்தாந்த குருமாணவ கலாசாலை ஆசிரியரும் மாணவரும் அண்மையில் அம்பிட்டியாவுக்குச் சென்று அங்குள்ள கத்தோலிக்க தேசிக குருமட ஆசிரியரினதும் மாணவரினதும் விருந்தினராக ஒரு நாளைக் கழித்தனர்.

பிரதம விருந்தினரான கொழும்பு அத்தியட்சகுரு ஆராதனைக்குரிய ஹறல்ட் டீ சொய்சா வத்திக்கான் சங்கத்தின் இரண்டாவது கூட்டத்தையிட்டு ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அவர் பேசுகையில் கத்தோலிக்கருக்கும் புரட்டஸ்தாந்தருக்கும் ஆழ்ந்த தொடர்புகள் பல உண்டென்றும், இருபாலருக்கும் ஒரே ஞானஸ்நானம் உண்டென்றும், இருபகுதியாரும் விசுவசிப்பதும் நேசிப்பதும் ஒரே கிறிஸ்துவைத் தானென்றும் எடுத்துக் காட்டினர்.

இராப்போசனத்துக்குப்பின் இரவு 10 மணிக்கு பிலிமத்தலாவா குழுவினர் அம்பிட்டியாக் குருமடத்தை விட்டு விடைபெற்றுத் திரும்பினர்.

## விடுதி ஞான ஒடுக்கம்

விடத்தல்தீவு இளைஞரின் ஞான வாழ்வுச்சரிதையில் 1964-ம் ஆண்டு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகும். சந்தியோகுமையோர் ஆலயத்தில் 31-1-64 மாலை தொடக்கம் 3-2-94 காலை வரை முதன் முதலாகப் பக்திவிமரிசையாக விடுதிஞான ஒடுக்கம் நடந்தேறியது. கட்டளைக்குரவர்கள் வண. வேதநாயகம், வண. ஜோய் பெர்னாண்டோ என்பவர்களின் ஆதரவால் எல்லாவசதிகளும் மகத்தான முறையில் ஆயத்தம் செய்யப்பட்டிருந்தன.

ஞான ஒடுக்கப் பிரசங்கியாரான வண. மிக்கேல் சாமி சுவாமி அவர்களால் போதிக்கப்பட்ட ஞான ஒடுக்கப் பிரசங்கங்கள் இளைஞரின் உள்ளங்களைக் கவர்ந்திழுத்தன. வண. சேவியர் சுவாமி அவர்கள் சிலுவைப் பாதை விளக்க உரைகள் நிகழ்த்தினர். சுவாமியவர்களே இல்லற அப்போஸ்தலிக்க தொண்டைப் பற்றிய கருத்தரங்கத்தினையும் கரும்பலகை விளக்கத்துடன் நடத்தினர்.

கருத்தரங்கில் இளைஞர் தமது சந்தேகங்களைத் தெரிவித்து விளக்கம் பெற்றது மன அருட்சிக்குரியதாயிருந்தது.

ஞானஒடுக்க முடிவில் மரி அன்னையின் சுற்றுப் பிரகாரம் நடைபெற்றது. திரு. தே. மரியநாயகம் அவர்கள் பணியாற்றிய எல்லோருக்கும் நன்றி தெரிவித்தார்.

—நிருபர்

## 8-வது வருட மரணஞாபகம்

**பிறப்பு: 22-7-88 இறப்பு: 18-2-56**

***"என்னைச் சீவியத்தில் நேசித்தவர்களே! என்னை மரணத்தில் மறவாதீர்."***

எனது நேசபத்தாவும், எங்கள் அருமைத் தந்தையுமாகிய **ஸ்ரீமான் அலேசுப்பிள்ளை பிரான்சிஸ்பிள்ளை** அவர்கள் இவ்வுலகை நீத்த எட்டாவது வருடம் இம்மாதம் 18-ந் திகதி செவ்வாய்க்கிழமை பூர்த்தியாவதால், அன்று தினம் காலை 6 மணிக்கு அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக யாழ்ப்பாணம், சஞ்சுவாம் கோவிலில் ஒரு துக்கப்பாடற் பூசை நிறைவேறும்.

இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளும், சங். சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகளும், உறவினர் — சிநேகிதர்களும், ஏனையோரும் அவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக விசேஷ விதமாய் வேண்டிக்கொள்ளுமாறு தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நேசப்பத்தாவை இழந்து துன்புறும்
**லூர்துமரி — பிரான்சிஸ்பிள்ளை**

அருமைத் தந்தையை இழந்து
துயருறும் பிள்ளைகள் :
**சங். சிஸ்ரர் மேரி பிரசன்ரேசன் :**
( திருக்குடும்பமடம் )
**சங். சிஸ்ரர் குழந்தையேசுவின் மேரி சுவிஸ்ரா**
(கார்மேல் மடம்)

## திரு. வஸ்தியாம்பிள்ளை சிங்கராயர் அவர்கள்

### அமரத்துவம் அடைந்த

## 1-ம் வருட ஞாபகம்

**தோற்றம் : 18-9-1890 மறைவு : 20-2-1963**

***"சீவியத்தில் இவரை நேசித்தவர்களே! மரணத்தில் இவரை மறவாதீர்கள்"***

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக மாதகல் புனித தொம்மையப்பர் ஆலயத்தில் 20-2-64 வியாழக்கிழமை ஒரு துக்கப்பாடற் பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறும் அன்பர்களும், குருக்கள், கன்னியரும் இவருக்காக வேண்டிக்கொள்ளும்படி தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்

**மனைவி : ரோசம்மா**
**மக்கள் : வண. பிதா B. A. மரியதாசன், ஓ. எம். ஐ, மேரி தெரேசா அருளானந்தம், வேபினு கெலன், துரைராஜா, சி. பத்தினாதர்,**

**மாதகல்**

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கைநெகிழப்பட்டவர்களின் விசேஷ பாதுகாவலரான அர்ச். யூதாததேயுவின் மன்றாட்டினால் எங்கள் குழந்தை பூரணசுகமடைந்துள்ளது. நன்றியறிதலாக இதனைப்பிரசுரிக்கிறோம்.

அடியார்கள்

மூளாய் றோட்,
யாழ்ப்பாணம்

## மாதகல் கெபி லூர்துமாதாவின் பிரார்த்தனை

அர்ச். லூர்துமாதாவின் நவநாள் செபமும் பிரார்த்தனையும் அடங்கிய இச்சிறிய புத்தகத்தின் விலை சதம் பதினைந்து.

கிடைக்குமிடம்:
**S. M. இன்னாசிமுத்து**
உபதேசியார்,
சென். தோமாஸ்
சேர்ச் லேன், மாதகல்.

## திரு. யோசவ் அன்ட்று அவர்களின்

# தேகவியோகம்

யாழ்ப்பாணம் சஞ் சூசைமாமுனிவர் அச்சகத்தில் ஒருகாலம் "போர்மன்" ஆகக் கடமையாற்றிய அந்திரேசுப்பிள்ளை அவர்களின் புதல்வனாகிய திரு. யோசவ் அன்ட்று (தம்பி) அவர்கள் சென்ற திங்கள் 30-ம் நாள் வியாழக்கிழமை பரமபதம் அடைந்தார். கடந்த முப்பது ஆண்டுகள் யாழ்ப்பாணம், பரி. அடைக்கலநாயகி ஆலயத்தில் வாத்திய ஆசானாக இவர் செவ்வனே செயலாற்றிப் புகழ்பெற்றவர். தட்டெழுத்து, சுருக்கெழுத்து முதலியவற்றை ஐயந்திரிபறக்கற்றுணர்ந்த இவர் பள்ளிப்படிப்பை முடித்து வழிதெரியாது நின்ற நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வியூட்டிச் சீவனோபாயத்திற்கு வழி வகுத்தமை போற்றற்குரியது இவர் கத்தோலிக்கருக்கும் மற்றோருக்கும் ஒரு மேல்வரிச்சட்டமாக விளங்கி அனைவரின் அன்பையும் பெற்றவர் என்பது இவரின் இறுதி யாத்திரையின் போது கலந்துகொண்ட மக்கள் கூட்டமும் கலங்கிய கண்களுடன் சென்ற மாணவர் கூட்டமும் எடுத்துக்காட்டியது.

இவரின் பிரிவால் துன்புறும் மனைவி, மக்கள், இனசனர், நண்பர்களுடன் நாமும் அனுதாபப்படுகிறோம்.

**R. I. P.**

## 7-ம் வருட மரணஞாபகம்

## 21 - 2 - 64

**பிறப்பு : 25-9-1898 இறப்பு : 21-2-1917**

யாழ்ப்பாணம் அர்ச். அடைக்கல மாதா கோயில் ஒழுங்கையைச் சேர்ந்த காலஞ்சென்ற கே. வஸ்தியாம்பிள்ளையின் மகள் இஞ்ஞேசம்மா இறைவனடிசேர்ந்த 7-ம் வருட ஞாபகத் தினம் பெப்ரவரி மாதம் 21-ந் திகதி. அன்று தினம் இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக கொழும்பு, தட்டாரத் தெரு, அர்ச். செபஸ்தியார் கோயிலில் ஒரு துக்கப்பாடற்பூசை நிறைவேற்றப்படும்.

இதனைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளே! விசுவாசிகளே! உறவினரே! இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாய் வேண்டுகின்றோம்.

இரக்கமுள்ள சர்வேசுரா! இவவுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருளும். முடிவில்லா, பிரகாசம் பிரகாசிக்கக்கடவது, ஆமென்.

பிரிவால் துயருறும் கணவன் : ச. இறப்பியேல்பிள்ளை, மருமகன் : மனுவேல் விலங்கவேல், மகள் : மரியா அலிஸ் அம்மா.

244/7 மெசஞ்சர் வீதி,
கொழும்பு.

மௌனமே மங்கையருக்கு மேன்மையான மணி ஆரம், ஆனல், அணிந்தால் அல்லவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்துவிட்டன ! விற்பனையாகின்றன !!

2-ம் வகுப்புக்குரிய

## முதல்நன்மைக் குறிப்பிடம்

தேவையானோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதவும்,

அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் கத்தோலிக்க அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம்.


## இரண்டாம்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தை அரசாளும் நாட்களில் முடி புனையப்பெற்ற தர்மபால இளவரசனுடன் பிரான்சிஸ்கன் துறவிகள் இலங்கையை அடைந்து கடவுளின் திருமறையைப் போதித்தனர். ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இத்துறவிகள் வேதத்திற்காகப் பிடிபட்டு, குதிரைக் கால்களில்கட்டி இழுக்கப்பட்டு வேதசாட்சிகளாக உயிர்துறந்தனர்.

இப்புனித வேதசாட்சிகளின் திரு இரத்தத்தின் பலனாய் இன்றுவரையும் பிரான்சீஸ்குவின் சபைமடங்கள் இலங்கையின் பலபாகங்களிலும் ஏற்பட்டு, பிரான்சீஸ்குவின் தரித்திரம், தாழ்ச்சி, பிறசிநேகம், திருப்பாடுகளின் பக்தி முதலிய அரும்புண்ணியங்களை அனுட்டித்து வருகிறது.

* தமிழ்ப்பேசும் கத்தோலிக்க இளைஞருக்கென மத்திய மலைநாட்டின் மாத்தளை மாநகரில் "அழகன்" மலை அடிவாரத்திலே மரியாயின் பிரான்சிஸ்கன் சகோதரர் என்ற பெயருடன் புனித பிரான்சீஸ் அசிசி மாமுனியின் சந்நியாச ஆச்சிரமம் ஒன்றுளது. அச்சபையில் சேர்ந்து கடவுளுக்குத் தொண்டு புரிய விரும்பின் அதன் மடாதிபதி அவர்களிடம் எழுதிக் கேட்டு விபரங்களை அறிந்துகொள்ளவும்.

F. B. M.

## கேட்டேன் ......

(மகளிர்மன்றத் தொடர்ச்சி)

மென்று விரும்புவதாகத் தாமே கூறுகிறாரல்லவா? ஆகவே நமதுசெபங்கள் மேலே குறிப்பிட்டபடி விடாமுயற்சி, தேவசித்தத்துக்கு அமைவு, தளரா நம்பிக்கை முதலியவற்றுடன் கூடியதாக அமையக் கவனிப்போம். எமது செபங்கள் யேசுவின் பரிசுத்த நாமத்தினுல் பிதாவை நோக்கியிருக்கட்டும். அப்பொழுது கேட்பதையெல்லாம் அதிகமாகப் பெற்றுக்கொள்ளுவோம்.

## பேசும்பேனு

( 3-ம் பக்கத்தொடர்ச்சி )

வர்த்தகர்கள் பெருமளவில் கவலை கொள்ளத் தொடங்கியுள்ளனர். சிகரெட்டை அதிகமாகப் புகைப்போரிடையே புற்றுநோய் விரைவாகப் பற்றிக்கொள்கின்றதென்னும் உண்மையே சிகரெட் வர்த்தக வீழ்ச்சிக்குக் காரணமாகும். மருத்துவர்களும், மருத்துவ சஞ்சிகைகளும் இந்தஉண்மையை அடிக்கடி வற்புறுத்திக் கொண்டேயிருக்கின்றார்கள். எங்கள் நாட்டுப் புகைபிடிப்பவர்களும் கவனிப்பார்களா?

### சிறுவர் நகரத்தில்

பேசும் பேனுவுக்கு அடுத்தவாரத்தில் வெளியிடுவதற்கு விடயமுண்டா என்று கேட்டார் குரவரொருவர். இருந்தால் கூறுங்கள் என்றேன். சிறுவர் நகரத்துக்குப் போகிறேன் கூடவந்தால் தேவையான அளவு பெற்றுக்கொள்ளலாம் என்ருர். மறுப்பேனு? உடனே கிளம்பிவிட்டேன். சிறுவர் நகரத்தில் பேசும்பேனுவின் அனுபவங்களை அடுத்தவாரம் சொல்லுகின்றேன்.

### புத்தக மதிப்புரை

## லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

தயாரிப்பு: லீலா ஸ்டோர்ஸ்,
249 நோறிஸ் வீதி,
கொழும்பு 11.

பதிப்பு: நியூ லீலா அச்சகம்,
33 சென். செபஸ்ரியன் மேடு,
கொழும்பு 12.

அகில இலங்கையிலும், தமிழ்நாடு அடங்கலும் மக்களின் ஒருமித்த அபிமானத்தைப்பெற்றுத் தமிழுலகில் வெளிவரும் ஒரேயொரு சித்திரக் கலண்டரென்று பெருமை பாராட்டிக் கொள்ளுகின்ற "லீலா பஞ்சாங்க சித்திரக்கலண்டர்" வரப்பெற்றேம். "தாய்மொழிதாழ்ந்தால் தாயகம் தாழும்", "தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்பன போன்ற இன்பசுலோகங்களைச் சங்கநாதம் செய்துகொண்டு, கண்ணையும் கருத்தையும் ஒருங்கே ஈர்த்து கொள்ளும் கவின்மிக்கதாய்ச் சரித்திரம் பேசும் சித்திரங்களோடும், காலத்திற்கேற்ற அருமையான புதிய அம்சங்களோடும்வெளிவந்திருக்கக்காணும் எவர்தான் மகிழ்ச்சியடையாதிருப்பர்? இதனைத் தாங்கிநிற்கும் அட்டைப் படங்கள் அவரவர் விரும்பிய அழகியசமயப்படங்களாகவும், சாகிய தலைவர்கள் ஆகியோரின் படங்களாகவும் காட்சியளித்து இதைச்சிறப்பிக்கின்றன. இந்தக்கலண்டரிலே சைவ மக்களும், முஸ்லீம்மக்களும் மட்டுமல்லாது கத்தோலிக்கமக்களும் அறியவேண்டிய யாத்திரைப்பதிகள், கோவில்களின் திருநாட்கள், கடன்திருநாட்கள், பல்வேறு ஆலயங்களின் படங்கள்ஆகியன இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு திகதிப்பக்கத்திலும் ஆங்கில, தமிழ், முஸ்லீம் ஆண்டு, திகதி நாளும், சரித்திரமுக்கியத்துவம்பெற்ற சித்திரங்கள், பிரதிமைகளும், ஒவ்வோர் அறிவுரையும், மற்றும் பலவிபரங்களும் தரப்பெற்றுச் சாகிய, சமய பேதமின்றிச் சகலருக்குமே பயன்படத்தக்க சமரசமுறையிலே அமைந்துள்ள இந்தக் கலண்டரை எவருமே வரவேற்பர் என்பது எமதுதிடமான நம்பிக்கை.

## செப அப்போஸ்தல சபை

**பொதுக்கருத்து :**

கிறிஸ்தவ நீதியும், அன்பும் இன்னும் செல்வாக்கில் முன்னேற்ற மடையா நாடுகளது தரித்திரம், உபத்திரவங்களை நீக்குவதற்காக வேண்டிக் கொள்ளுவது.

**மிஷன்கருத்து :**

மிஷன் நாடுகளில் தொண்டாற்றும் சகோதரரது தேவஅழைத்தல் எண்ணிக்கையிற் பெருகுவதற்காக மன்றாடிக் கொள்ளுவது.

## மறைகின்றாய் ஏன் ?

விண்ணூர்ந்து ஒளிகாலும் விரிகதிரே!
விளங்குகின்ற கலைவடிவே! ஒளிப்பிளம்பே!
மண்மடந்தை வாழ்வு பெறவந்தாய்; பின் ஏன்
மறைகின்றாய். மேற்றிசையில் மனதை வைத்தாய்!;
கண்ணிருந்தும் வழிகாணு மனிதர் செய்கை
காண்பதற்குச் சகிக்கலையோ, கயமைவாழ்வை
எண்ணமதில் கொண்டவர்கள் இருப்பதாலோ
இருள் சூழ உலகைவிட்டு ஏகுகின்றாய்.

●

பொங்குகின்ற ஒளிக்கரத்தால் இருளை ஓட்டிப்
புதுமலராய் புவிமலர்ந்து அழகு பூக்கத்
தங்கநிற எழில் தோய்ந்து உதயமாகித்
தரணிதனை வலம் வந்த அலுப்பினலோ,
இங்கிருக்கும் மாந்தர்கள் செய் தீமைகண்டோ;
எள்ளளவும் அன்பு அறம் இல்லை என்றே,
மங்கிவரும் மனித குணம் கண்டோ நீயும்;
மறைகின்றாய் மாலை என்னும் போர்வையுள்ளே!

●

பொல்லாத மனிதர் இவர் என்றே பூவில்
பொறுமைகண்டோ, போர்கண்டோ, ஞாயிறே நீ
சொல்லதனில் வாய்மை இல்லா மக்கள் என்றே
சேர்ந்து உறவாடச் சற்றும் விருப்பமின்றி,
நில்லாது செல்கின்றாய் மேல்கடலை நோக்கி
நிலமகளைத் தூங்கவிடும் நினைப்பினலோ, நீதி
இல்லாத ஆட்சிதனைக் கண்டதாலோ
ஏகுகின்றாய் ஞாலத்தை இருளில் விட்டு.

ஆசிரியர் ச. அமிர்தநாதர்

## வாசகநேயர் கவனத்திற்கு

கடதாசியின்விலை அளவுக்குமிஞ்சி ஏறிவிட்டது மல்லாமல் கிடைப்பதும் அரிதாகிவிட்டது. இதன் காரணமாகப் பாதுகாவலன் ஆறுபக்கங்களுடன் வெளிவருவதையிட்டு வருந்துகிறேம்.




விவசாய ரசாயன
மருந்து வகைகளாலும்
கிருமி நாசினி
மருந்துவகைகளாலும்
உங்கள் பயிர்களை அழிக்கும்
பூச்சி புழுக்கள்
மற்றும்
பயிர்களைப் பாதிக்கும்
புற்களையும்
அறவே ஒழித்து
உங்கள் கமத்தொழிலில்

அதிக லாபத்தைப் பெறுங்கள்!

இம் மருந்துகளைத் தெளிக்கக்கூடிய
சிறந்த
தெளிகருவிகள் (SPRAYERS)
எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்

விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்

ஓட்டோஸ் லிமிட்டெட்,

தந்தி: "AUTOS" யாழ்ப்பாணம். டெலிபோன் : 496.
கிளை
தந்தி: "AUTOS" வவுனியா. டெலிபோன் : 577.


இப்பத்திரிகை 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம்ஆண்டு மாசிமாதம் 15-ந் திகதிசனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org